

# Language, Literature & National Integration

## Expressions from Assam and Tamil Nadu



Edited by
Dr. B. Vijayakumar

Centre for South Asian Studies &
Dept. of Modern Indian Languages and Literary Studies
GAUHATI UNIVERSITY



Language, Literature &
National Integration
Expressions from Assam and Tamil Nadu
Edited by
Dr. B. Vijayakumar

# Language, Literature, and National Integration

Expressions from Assam and Tamil Nadu

Edited By

Dr. B. Vijayakumar

Centre for South Asian Studies
&
Dept. of Modern Indian Languages and Literary Studies
**Gauhati University**

Title of the Book: Language, Literature, and National Integration: Expressions from Assam and Tamil Nadu

Name of the Editor: Dr. B. Vijayakumar

ISBN: 978-81-986329-8-2

First Edition: 2025

Published by
**Centre for South Asian Studies &**
**Dept. of Modern Indian Languages & Literary Studies**
Gauhati University, Guwahati- 781014, Assam .
website: https://gauhati.ac.in

# பெரியபுராணத்தில் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள்

**வே.வெ.சுஜாதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை – 600 117

**பேராசிரியர் இரா. பன்னிருகைவடிவேலன்**
பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை - 600 117

**முன்னுரை**

ஒவ்வொருஇலக்கியமும்சமுதாயஉணர்வு,ஒற்றுமை, கலாச்சாரச் செறிவு, பண்பாடு, பழக்கவழக்கங்கள், ஒருமைப்பாடு ஆகிய கருத்துக்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும். இவ்வாறான இலக்கியங்கள் சிறந்த இலக்கியங்களாகவும், என்றென்றும் அனைவராலும் நினைவு கூறத்தக்கவைகளாகவும் திகழ்கின்றன.

> **ஒரு பெருங்கவிஞன் தான் வாழுங்காலத்தையும் அதற்கு முற்பட்ட காலத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளான் என்பது திறனாய்வாளர் கண்ட முடிவாகும்.1**

மேலும் நன்னெறிகளையும், நல்லொழுக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் உலகுக்குணர்த்த இலக்கியங்கள் துணைபுரிகின்றன. இவற்றிற்குச் சிறந்த உதாரணமாக பெரியபுராணம் திகழ்கின்றது என்பதனையும்,

**சாதி, மத, பேதம் காணாத ஒருமைப்பாடு**

**பக்திவழியில் தேசிய ஒருமைப்பாடு**

**இசைவழியில் தேசிய ஒருமைப்பாடு**

**விழா, வழிபாட்டின் மூலம் தேசிய ஒருமைப்பாடு**

**உயர்வு தாழ்வில்லா தேசிய ஒருமைப்பாடு**

ஆகிய வகைகளில் பெரியபுராணத்தில் காணப்படும் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனைகளைப்பற்றியும் இக்கட்டுரையின் வழிக் காணலாம்.

**பெரியபுராணம்**

நாயன்மார்கள் என்று போற்றப்படுகின்ற சிவனடியார்களின் சீரிய திருத்தொண்டுகள் குறித்து உலகுக்குணர்த்த இறையருளால் சேக்கிழார் மூலமாக இயற்றப்பட்டதே பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணமாகும்.

செயற்கரியசெயல்களை,செயலின்மேன்மையையும் அதற்கானபலனையும்தனதெனக்கொள்ளாமல்உலகோர் உய்ய, தவவாழ்வு வாழ்ந்தவர்களே நாயன்மார்கள்.

நாயன்மார்களின் வரலாற்றின் மூலம் அவர்களது வேற்றுமையில் ஒற்றுமை என்னும் சிந்தனையையும், நல்லிணக்கச் சிந்தனையையும், அனைவருக்கும் எளியவராய்த் திகழ்ந்த தன்மையையும், கலாச்சாரத்தையும் பண்பாட்டையும், பக்திநெறி, தொண்டுநெறி ஆகியவற்றை எந்நிலையிலும் தவறாது கடைப்பிடித்துவாழ்ந்த சீர்மையையும் சேக்கிழார் வாயிலாக அறியமுடிகிறது.

**சேக்கிழாரைப் பொறுத்தமட்டில் ஏனைய புலவர்களைப்போல் இருந்த இடத்தில் இருந்தபடியே பாடியவர் அல்லர். இத்தமிழகம் முழுவதும் சுற்றித் திரிந்து, கல்வெட்டுக்கள், அரசர்கள், குடிமக்கள் என்பவர்களுடைய**

**ஆவணங்கள் என்பவற்றையெல்லாம் பழுதறக்கற்றுத் தேர்ந்தார். எனவே அவர் தமிழகச் சமுதாய அமைப்பை எடுத்துக்கூறினால் அது அந்நாளைய தமிழகத்தின் சமுதாய வரலாறாகவே கொள்ளப்படலாம். பக்திச்சுவை சொட்டக்காப்பியம் இயற்றினார் என்பதால் அது நடைமுறை வாழ்க்கையைக் குறிக்காமல் கற்பனை உலகில் உலாவரும் காப்பியமாக இருந்துவிடும் என்று நினைப்பது தவறாகும்.**[2]

**சாதி மத பேதம் காணாத ஒருமைப்பாடு**

**'ஜாதி மதங்களைப் பாரோம்**

**வேதியராயினும் ஒன்றே – அன்றி**

**வேறு குலத்தினராயினும் ஒன்றே'**

எனஅந்தணர்குலத்தில்பிறந்தபாரதியார்பாடியதோடு மட்டுமல்லாமல் அங்ஙனமே வாழ்ந்துகாட்டியுள்ளார்.

இவ்வாறே பெரியபுராணத்திலும் அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த அத்தனை சாதிகளைச் சேர்ந்தோரும் இடம்பெற்றிருக்கின்றனர். இவர்களுள் அந்தணர் மரபைச்சேர்ந்தோர் 14 பேர், வணிகர் 6 பேர், வேளாளர் 13 பேர், குருக்கள் மரபினர் 4 பேர், ஆதிசைவர் 4 பேர், குயவர்,வேடர், இடையர், ஏகாலியார், பரதவர், சாலியர், பாணர், பறையர், ஈழவர் (சாணார்), மாமாத்தியர் என்ற 10 வகுப்புகளிலும் தலா ஒருவர், என, அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்தோரும் நாயன்மார்களாக அன்றுமுதல் இன்றுவரை போற்றப்படுகின்றனர்.

இவற்றின் மூலம் நாயன்மார்கள் அனைவரும் சாதி வேற்றுமை ஏதும் பாராமல் பக்தி என்னும் அடிப்படையில் ஒன்றுப்பட்டிருந்தனர் என்பது புலனாகிறது.

**பக்திவழியில் தேசிய ஒருமைப்பாடு**

பக்தி என்பதும் ஓர் ஒழுக்கமாகும். பக்தியின்

வழி நாயன்மார்கள் தம் மனத்தை இறைவனிடம் ஒருமுகப்படுத்தி வைத்ததோடு மட்டுமல்லாமல், அனைவரையும் பக்திவழி அறநெறிப்படி வாழ வழிசெய்துள்ளனர்.

இப்பக்தியானது, அனைவருக்கும் பொருந்தும் வண்ணமும், அவரவர் வழக்கப்படியும், அவரவர் வசதிப்படியும் செய்யப்படுவதாகும்.

**தேவாரப்பதிகங்கள் இறைவன் புகழ்பாடும் பக்திப் பாடல்களாக இருப்பதோடு சிறந்த கவிதைகளாகவும் இலங்குவதைக் காணலாம். ஆன்ம ஒருமைப்பாட்டை உண்டாக்கும் சமயப் பிரசாரத்திற்கு, ஆன்ம ஒருமைப்பாட்டை வளர்க்கும் கவிதை சிறந்த துணையாவதை அனைவரும் அறிவார்கள்.**[3]

சிவபெருமானைத் **'தென்னாடுடைய சிவனே போற்றி'; 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'** என்று அடியவர்கள் போற்றுவது இறைவன் அனைவருக்குமானவர் என்பதன் உட்கருத்தை வலியுறுத்தவேயாகும்.

பெரியபுராணத்திற்குக் காரணமான சுந்தரரும், நம்பியாண்டார் நம்பியும், சேக்கிழாரும் முறையே திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, பெரியபுராணம் ஆகியவற்றின் மூலம் உணர்த்துவது ஒற்றுமையையே ஆகும். மேலும் சிறப்புறக்கூறுவதானால் இது பக்தி வழி ஒருமைப்பாடாகும்.

**'பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்**

**பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்**

**சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்**

**திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்**

**முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்**

**முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்**
**அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்'**
(திரு.தொ.தொகை-பா.10)

எப்பொழுதும் இறைவனைப் பாடிப்பணிவோரும், தம் சித்தமெல்லாம் சிவமயமாக்கியுள்ளோரும், திருவாரூரில் பிறந்தவர்களும், இறைவனுக்கு பூசை செய்வோரும், தமது திருமேனியில் திருநீறு பூசியுள்ளோரும், எவராகிலும் அவர்களுக்கு தான் அடிமை என்றும், அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன் என்று உரைப்பதன் மூலம், தான் வாழும் ஊர், தேசம் மட்டுமல்லாமல் பிற தேசங்களில் வாழும் இறையடியவர்கள் அனைவருக்கும் தான் அடியேன் என்று தேசிய ஒருமைப்பாட்டை சுந்தரரும்,

**'மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக்கு அப்பால்**
**முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்**
**நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்**
**நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்**
**பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை**
**புதியமதி நதியிதழி பொருந்த வைத்த**
**சேவேந்து வெல்கோடியான் அடிச்சார்ந் தாரும்**
**செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே'**
(தி.தொ.பு./ப.ப.ச./அ.அ.பு.- பா.1)

என்று சேக்கிழாரும், மூவேந்தர்களின் ஆளுகைக்குட்பட்ட தமிழ் வழங்கும் நாடுகளுக்கும் அப்பால், சிவனடியார்களும், சுந்தரரால் போற்றப்பட்டவர்களுமான அடியார்களைப் போற்றி வெளிப்படையாகக் கூறியுள்ளமையைக் காண்கையில், நம் தேசத்திற்குள்ளே பேணும் ஒருமைப்பாட்டை மட்டுமல்லாது, பிறதேசங்களுடனான ஒருமைப்பாட்டைப்

பற்றியும் கூறியுள்ள சிறப்பை அறியமுடிகிறது.

மனித சமுதாயத்தின் விருப்பு, நன்மை, தீமை போன்ற அறநெறிப்பயன்களின் மதிப்புகள், ஒழுக்கச்சிந்தனைகள் ஆகிய சமுதாயத் தேவைகள், நேரிய வழியில் கிடைக்கப்பெறுதல் வேண்டும் என்று விழைந்தார் சேக்கிழார். நமது நாட்டுப்பண்பு மறைந்துவிடக்கூடாதென்றும் கருதினார்.

**இசைவழியில் ஒருமைப்பாடு**

இசை அனைவரையும் ஈர்க்கவல்லது. இவ்விசையானது பாடல், பஜனை, நாட்டியம், கதாகாலச்சேபம், கருவிகளின் வழி இசை என பல்வேறு வகைகளில் பரிமளிக்கின்றது.

**“ஒன்றி இருந்து நினைமின்கள்”** (தி.4.ப.81.பா.2) என்று அப்பர் பாடினார். ஒன்றியிருந்து வழிபடுவது எப்படி என்பதைச் சுந்தரர் வழிபட்டுக் காட்டினார்.

பக்திச்சுவை பொருந்திய பாடல்கள் இசைக்கருவிகளுடன் பாடப்படும்பொழுதும், அவற்றைக்கேட்கும் பொழுதும் மக்கள் உள்ளங்கள் ஒன்றுபடும், தெய்வங்களையும் ஈர்க்கும்.

ஆடல்வல்லான் ஈசனும், குழலிசை வல்லான் கண்ணனும், வீணை இசை வித்தகி சரசுவதியும், மிருதங்க இசை வல்லான் நந்திதேவரும், நரம்பிசைக்கருவி வித்தகர் நாரதரும் இசையோடு இயந்த பக்தியையே நமக்கு உணர்த்துகின்றனர்.

ஞானசம்பந்தர் தமது தாள இசை மூலமும், ஆனாய நாயனார் தம் குழலிசை மூலமும், திருநீலகண்ட நாயனார் தமது யாழிசை மூலமும் அனைவரையும் பக்தியில் ஈடுபட வைத்தனர்.

மேலைநாடுகளிலும் நமது தவில், நாகசுவரம், புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற பல இசைக்கருவிகளும்

பக்திப்பாடல்களும் பெரிதும் பரவலாகியுள்ளதைக் காண்கையில், இசையின் மூலம் தேசங்களுக்குள் ஓர் ஒருங்கிணைப்பு ஏற்பட்டுள்ளமையின் சிறப்பை அறியமுடிகிறது.

இசைவழி மட்டுமல்லாது அனைத்துக் கலைகள் மற்றும் பண்பாட்டின் வழியாகவும் தேசிய ஒருமைப்பாடு பரவி, நீடித்து நிலைத்துள்ளது.

**விழா, வழிபாட்டின் மூலம் ஒருமைப்பாடு**

திருவிழா என்பது அனைவரையும் ஒருங்கிணைத்து ஓர் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சிறந்ததோர் நிகழ்வாகும்.

ஊர்கூடித் தேரிழுக்கவேண்டும் என்று கூறுவர். இதன் பொருள் ஓர் விழா எனில் அனைவரின் ஒருங்கிணைப்பும் இருந்தால் சிறப்பாய் அமையும் என்பதாகும்.

**‘வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும் சாதிகள் நெறியில் தப்பா தனயரும் மனையில் தப்பா…’** (தி.12.சரு.1-2.பா.34)

என்னும் பெரியபுராணத்தின் திருநாட்டுச்சிறப்பைப்பற்றிக் கூறும் வரிகளில், வீதிகளில் விழாவின் ஆரவாரமும், வீடுகளில் விருந்தினரின் ஆரவாரமும், ஒவ்வொரு சாதியினரும், அவரவர் ஒழுக்கநெறி நின்றும் தவறாது நடந்து வந்தனர் என்றும், குழந்தைகள் குதுகுலத்துடன் இருந்தனர் என்றும், பறவை விலங்குகளும் அவ்வவற்றின் நெறிமுறையில் இருந்தன என்றும், ஒருமைப்பாட்டைப்பற்றி அழகுறக் காட்சிப்படுத்தியுள்ளார் சேக்கிழார்.

**உயர்வு தாழ்வு கருதாமை**

**‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்**

**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே…’**[4] (வந்தே மாதரம்-பாரதியார்)

எனப் பாரதியாரும் ஒற்றுமையைப்பற்றி வலியுறுத்தியுள்ளார்.

சிவவேதியராகிய ஆரூரரை, நரசிங்கமுனையரையாகிய அரசர் மகனாகத் தத்தெடுத்து வளர்த்துள்ளார்.

ஆரூரரான சுந்தரர், உருத்திர கணிகையரான பரவையாரையும், வேளாண் மகளிரான சங்கிலியாரையும் மணந்து கொண்டுள்ளார்.

வேளாண் மரபினரான கோட்புலியாரின் குழந்தைகளை ஆரூரரான சுந்தரர் மகன்மை கொண்டார்.

சேரமான் பெருமானுடன் சுந்தரரும், சுந்தரருடன் சேரமான் பெருமானும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்தனர்.

மறையவரான அப்பூதியடிகள் வேளாண் மரபினரான திருநாவுக்கரசரை குருவாக ஏற்றார்.

திருநாளைப்போவார் என்னும் அடியவருக்கு ‘இன்னல் தரும் இழிபிறவி இது தடை’ எனும் உணர்வு தமக்குத்தாமே இருந்தமையின், இறைவன் அவ்வுணர்வை மாற்றி ஏற்கத் திருவுள்ளங்கொள்ள நேர்ந்தது.

திருநீலநக்கர் தமது வேள்விச்சாலையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர்தம் மனைவியையும் தங்கவைத்தார்.

ஞானசம்பந்தர் பதிகங்கள் பாடியவண்ணம் ஊரூராகச் செல்கையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் மனைவியும் யாழ்வாசித்துக்கொண்டு உடன் சென்றனர்.

திருவிழாவில் கலந்துகொண்ட நமிநந்தியடிகளுக்கு அனைவரும் சிவகணங்களே என்று ஒருமைப்பாட்டை உணர்த்தியருளினார் சிவபெருமான்.

இவ்வாறு நாயன்மார்கள் தம்முள் எவ்வித உயர்வு தாழ்வையும் கருதாது வாழ்ந்துகாட்டினர் என்பது

பெரியபுராணம் வாயிலாக அறியப்படுவதாகும்.

> இறைவனுடன் ஒருமை பெற்று நிற்கும் **இவ்வடியவர்கட்கு, எவ்வுயிர்களிடத்தும் ஒருமை பெற்று நிற்கும் தகுதியும் சால்பும் ஏற்படுகின்றன**[5]

என உரைக்கும் சேக்கிழார், தமது பெரியபுராணத்தின் ஆரம்பத்தில் திருநகரச்சிறப்பு என்னும் சருக்கத்தில் எவ்வுயிரையும் தம் உயிர்ப்போல் எண்ணும் உயர்வு தாழ்வில்லா மேன்மையை மனுநீதிசோழனின் வரலாற்றின் மூலம் தெளிவுபடுத்துக்கிறார்.

**நிறைவாக...**

**'தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**

**தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்**

**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்...'**[6] (உலக ஒற்றுமை-பாரதிதாசன்)

தொல்லுகத்தோரெல்லாம் ஒன்றே என்று ஒருமைப்பாட்டுச் சிந்தனையோடு வாழ்ந்தவர்களான நாயன்மார்கள் தூய உள்ளத்தோர்களாகவும், பரந்துபட்ட பெரிய உள்ளம் படைத்தோராகவும், தன்னிகரில்லா தாயுள்ளம் கொண்டவர்களாகவும் திகழ்ந்தனர். தெய்வச் சேக்கிழார் பெருமான், சமூகம் மதிப்பிடுகின்ற அடியார்களை மட்டுமின்றி, அனைவரையும் சமூக அக்கறை கொண்டு ஒருங்கிணைக்கும் நற்பணியைச் செய்துள்ளார்.

பெரியபுராணத் திருத்தொண்டர்கள், எவ்வகைத் துன்பத்திலும் தளராமல், கொண்ட கொள்கையில் மாறாமல், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு இல்லாமல், எங்கும் அமைதியும் நல்லிணக்கமும் தொடர, கலாச்சாரம் பண்பாடு இவற்றைச் சரிவர கடைப்பிடித்து அறநெறி தவறாமல், இறை வழிபாட்டின் மூலமும், திருத்தொண்டுகளின் மூலமும், ஒருமைப்பாட்டுச்

சிந்தனையுடன் தாமும் வாழ்ந்து, பிறரும் வாழ வழிகாட்டியுள்ளனர்.

பெரியபுராணத் திருத்தொண்டர்களின் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனையையும், அறநெறி ஒழுக்கத்தையும், இன்றைய இளைய சமூகத்தினரான மாணாக்கர்கள் கற்று, உணர்ந்து, தாங்களும் கடைப்பிடித்து, என்றென்றும் தேசிய ஒருமைப்பாடு சிறந்து விளங்குமாறு வாழவேண்டும்.

**துணைநூற்பட்டியல்**


சேக்கிழார் திருத்தொண்டர் புராணம், பன்னிரண்டாம் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை

பாரதியார் கவிதைகள், வானதி பதிப்பகம், சென்னை-17

பாரதிதாசன் கவிதைகள், கவிதா வெளியீடு, முதற்பதிப்பு - 2008, சென்னை-17

பேரா. அ. ச. ஞானசம்பந்தன், தேசிய இலக்கியம்-பெரியபுராணம், கழகவெளியீடு, நான்காம் பதிப்பு-1992, சென்னை-14

முனைவர். மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி-ஆய்வு நூல், முதற்பதிப்பு-2002, அலமு பதிப்பகம், சென்னை-14


**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

- ✓ தி.தொ.தொகை - திருத்தொண்டத்தொகை
- ✓ தி.தொ.பு./ப.ப.ச./அ.அ.பு. - திருத்தொண்டர் புராணம்/பத்தராய்ப் பணிவார் சருக்கம்/அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணம்

- ✓ தி.தொ.பு./தி.ம.ச./தி.நா.சி. - திருத்தொண்டர் புராணம்/திருமலைச் சருக்கம்/திருநாட்டுச் சிறப்பு
- ✓ தி. - திருமுறை
- ✓ பதி. - பதிகம்
- ✓ பா. - பாடல்

1. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப.567.

2. பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, பக்.567 & 568.

தேசிய இலக்கியம்-பெரியபுராணம், அ.ச. ஞானசம்பந்தன், ப.7

3. பாரதியார் கவிதைகள், வானதி பதிப்பகம், ப.17

4.சேக்கிழார்திருத்தொண்டர்புராணம்,பன்னிரண்டாம் திருமுறை-முதற்காண்டம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், ப. 148

5. பாரதிதாசன் கவிதைகள், கவிதா வெளியீடு, ப.124